**ஜனவரி – 21**

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ் நாடு – சாலை விபத்துக்கள்

❖ தமிழ்நாடு மாநிலமானது ஜனவரி 20 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை 31வது சாலைப் பாதுகாப்பு வாரத்தைக் கடைபிடிக்க இருக்கின்றது.

❖ அபாயகரமான சாலை விபத்துக்களானவை 2016 ஆம் ஆண்டை ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 43% அளவிற்குக் குறைந்துள்ளன.

# தேசியச் செய்திகள்

## POLNET 2.0 தளம்

❖ புது தில்லியில் நடைபெற்ற பொதுப் பாதுகாப்பு மற்றும் பேரிடர் நிவாரண அமைப்புகளின் தலைவர்களுக்கான தேசிய மாநாட்டின் போது புதிய மற்றும் ஒரு மேம்பட்ட தளமான 'போல்நெட் 2.0' என்ற ஒரு தளத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிமுகப் படுத்தினார்.

❖ 2006 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்ற காவல்துறை கம்பியில்லா ஒருங்கிணைப்பு இயக்குநரகம் ஆனது நாட்டில் போல்நெட் அல்லது காவல்துறை வலையமைப்புச் சேவைகளை நிர்வகித்துச் செயல்படுத்துகின்றது.

❖ இது பேரழிவுகள் அல்லது சட்டம் ஒழுங்குச் சிக்கல்களின் போது பயனளிக்கும் வகையில் தொலைதூரப் பகுதிகளில் கூட செயற்கைக் கோள் தொடர்பு மூலம் காவல் படைகளுக்கு காணொளி மூலமான கலந்தாய்வு வசதிகளையும் இணைய வசதியையும் வழங்க உள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## கடல்சார் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு மையம்

❖ இந்திய அரசானது இலங்கையில் கடல்சார் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு மையத்தை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது.

- 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் கையெழுத்திடப்பட்ட இரண்டு கடல்சார் ஒப்பந்தங்கள் இவ்விரு நாடுகளுக்கிடையே உள்ளன.
- 1974 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில், சில பாதுகாப்பு முன்னெச்சரிக்கை ஒப்பந்தங்களுடன் கச்சத் தீவின் மீதான இலங்கையின் இறையாண்மையை இந்தியா ஒப்புக் கொண்டது.
- தனது நாட்டு மீனவர்களைப் பாதுகாப்பதற்காக இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இந்தியாவால் மேற்கொள்ளப் பட்டன.

## பட்டை மற்றும் சாலை முன்னெடுப்பு ஒப்பந்தங்கள்

- சீனா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளானவை பொருளாதாரப் பெருவழிப் பாதைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பட்டை மற்றும் சாலை முன்னெடுப்பின் கீழ் (Belt and Road Initiative - BRI) 33 புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- மேலும், க்யுக்பியு சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று அழைக்கப்படும் ஒரு ஆழமான துறைமுகத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்த இரு நாடுகளாலும் சலுகை ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

***BRI பற்றி***

- இத்திட்டமானது சீனாவை இந்தியப் பெருங்கடலை எளிதில் அணுகுவதற்கு அனுமதிக்கின்றது.
- ஏனென்றால், சீனா பெரும்பாலும் அதன் எண்ணெய்த் தேவைகளை இறக்குமதி செய்கின்ற மலாக்கா ஜலசந்தியை இந்தப் பாதையானது கடந்து செல்கிறது.
- இது சீனாவின் முத்து வளைய (String of Pearls) திட்டங்களுக்கு உதவுகின்றது.
- மலாக்கா ஜலசந்தியானது அந்தமான் கடலையும் தென் சீனக் கடலையும் இணைக்கின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## உலக தங்க இருப்புக் கண்ணோட்டம் 2020

- உலக தங்க ஆணையமானது (World Gold Council - WGC) சமீபத்தில், “2020 ஆம் ஆண்டுக்கான உலக தங்க இருப்புக் கண்ணோட்டம்” என்னும் அறிக்கையை வெளியிட்டுள்ளது
- 2010 ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடும் பொழுது 2019 ஆம் ஆண்டு தங்கத்தின் மீதான முதலீடுகள் மிகச் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தியுள்ளன என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- WGC இன் கூற்றுப் படி, இந்திய ரிசர்வ் வங்கியானது தற்போது 625.2 டன் தங்கத்தை இருப்பு வைத்திருக்கின்றது.
- இது நாட்டின் அந்நியச் செலாவணி மதிப்பில் 6.6% ஆகும்.
- இதன் மூலம், உலகில் மற்ற நாடுகளின் மத்திய வங்கிகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவானது உலகில் ஆறாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவை விட அதிக தங்கம் இருப்பு வைத்திருக்கின்ற மற்ற 5 நாடுகளாவன - சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், துருக்கி மற்றும் போலந்து ஆகியவையாகும்.
- 2019 ஆம் ஆண்டில், தங்கத்தை அதிகம் விற்பனை செய்த நாடுகள் உஸ்பெகிஸ்தான் மற்றும் வெனிசுலா ஆகும்.

*WGC பற்றி*

- WGC இன் தலைமையகமானது லண்டனில் அமைந்துள்ளது.
- WGC இன் அலுவலகங்கள் சீனா, இந்தியா, அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அமைந்துள்ளன.
- இந்தியாவில் WGC அலுவலகமானது மும்பையில் அமைந்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நில அதிர்வு ஆபத்துப் பகுதிகளின் நுண்மண்டலமாக்கல் திட்டம்

- மத்தியப் புவி அறிவியல் அமைச்சகமானது இந்தியாவின் முக்கிய நகரங்களில் நில அதிர்வு அபாயம் ஏற்படும் பகுதிகளின் நுண்மண்டலமாக்கல் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டமானது சில போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நில அதிர்வு நடவடிக்கைகளின் அபாயங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இதுவரை, சிக்கிம் மாநிலத்திலும் பிற 8 நகரங்களிலும் நிலப்பகுதி வரைபடமாக்கல் செய்யப் பட்டுள்ளது.
- அந்த 8 நகரங்களாவன டெல்லி, பெங்களூரு, கொல்கத்தா, குவஹாத்தி, ஜபல்பூர், டேராடூன், அகமதாபாத் மற்றும் காந்திதாம் ஆகியவை ஆகும்.
- நுண்மண்டலமாக்கல் நுட்பங்கள் நன்கு செயல்படுத்தப்படும் நாட்டிற்குச் சிறந்த உதாரணம் ஜப்பான் ஆகும்.

*இது பற்றி*

- இது சில காரணிகளின் அடிப்படையில் பூகம்பப் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வாய்ப்பு உள்ள பகுதிகளைப் பிரிக்கும் ஒரு செயல்முறையாகும்.
- இந்தக் காரணிகளில் அந்தப் பகுதிகளின் புவியியல் மற்றும் புவி இயற்பியல் பண்புகள் ஆகியவை அடங்கும்.
- அவை நில அதிர்வு, நிலச்சரிவு, எளிதில் திரவமாக்கல், பாறை சரிந்து விழும் ஆபத்து மற்றும் பூகம்பங்களால் ஏற்படும் வெள்ளம் ஆகியவை அடங்கும்.

## வேளாண் தயாரிப்பு சோதனை ஆய்வகங்கள்

- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் மேம்பாட்டு ஆணையம் (Agricultural and Processed Food Products Development Authority - APEDA) தற்போதுள்ள 51 ஆய்வகங்களுடன் 135 ஆய்வகங்களை இணைத்துள்ளது.
- குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் கர்நாடகா போன்ற உயர் விவசாயத் திறன் கொண்ட மாநிலங்களில் புதிய ஆய்வகங்கள் நிறுவப்பட உள்ளன.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## தேசிய தூய்மை கங்கைத் திட்டம்

- தேசிய தூய்மை கங்கைத் திட்டமானது (National Mission of Clean Ganga - NMCG) கங்கை

நதிப் படுகையின் ஈர நிலங்களைப் பாதுகாக்க நமாமி கங்கா திட்டத்தின் கீழ் முயற்சி எடுத்துள்ளது.


- ஈர நிலங்களானவை ஊட்டச்சத்துப் பொருட்களின் மறுசுழற்சி, வெள்ளம் & வறட்சிக் குறைப்பு, மேற்பரப்பு & நிலத்தடி நீர் மட்டத்தின் புதுப்பித்தல் ஆகியவற்றை வழங்குகின்றன.
- NMCG ஆனது கங்கை நதியின் புத்துயிர்ப்பு, பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான தேசிய கங்கை ஆணையம் என்று குறிப்பிடப்படுகின்ற தேசிய ஆணையத்தின் செயல்படுத்தும் பிரிவு ஆகும்.
- 1986 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்ட விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட தேசிய கங்கை நதிப் படுகை ஆணையத்தை 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தேசிய கங்கை ஆணையம் மாற்றி அமைத்து உள்ளது.
- உத்தரகாண்ட், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், பீகார், மேற்கு வங்கம் மற்றும் டெல்லி ஆகிய 11 மாநிலங்களை இந்தப் படுகை உள்ளடக்கியுள்ளது.
- உலக வங்கியின் நிதியுதவி பெற்ற இந்த தேசிய கங்கை நதிப் படுகைத் திட்டங்களின் தற்போதைய கவனமானது கங்கை நதி பாய்கின்ற உத்தரகாண்ட், உத்தரப் பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய ஐந்து முக்கிய மாநிலங்களில் உள்ளது.




## டால்பின் கணக்கெடுப்பு - சிலிக்கா ஏரி

- ஒடிசா மாநிலக் கடற்கரையில் டால்பின் கணக்கெடுப்பானது சிலிக்கா மேம்பாட்டு ஆணையத்தால் மேற்கொள்ளப் பட்டது.
- 146 ஐராவதி டால்பின்கள் இங்கு காணப்பட்டன.
- தற்போது, ஐராவதி டால்பின்களின் மொத்த எண்ணிக்கையானது உலகளவில் 7,500க்கும் குறைவாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இவற்றில் 6,000 டால்பின்கள் வங்க தேசத்தில் உள்ளன.
- உலகிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான டால்பின்களைக் கொண்ட ஒற்றை

உப்பங்கழி அல்லது காயல் ஏரியாக சிலிக்கா ஏரி கருதப் படுகின்றது.




*ஐராவதி டால்பின் பற்றி*

- மியான்மரில் உள்ள ஐராவதி ஆற்றில் காணப்படுவதனால் இந்த இனமானது ஐராவதி என்ற அதன் பொதுவான பெயரைப் பெற்றிருந்தாலும், 1866 ஆம் ஆண்டில் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள இன்றைய ஆந்திர மாநிலத்தின் விசாகப் பட்டினம் துறைமுகத்தில் காணப்பட்ட ஒரு மாதிரியிலிருந்து இது முதலில் அறியப் பட்டது.
- அதன் வீச்சு வங்காள விரிகுடாவிலிருந்து நியூ கினியா மற்றும் பிலிப்பைன்ஸ் வரை நீண்டுள்ளது.
- ஐராவதி நதியைத் தவிர, இது இந்தியாவின் கங்கை மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் மீகாங் நதியிலும் காணப்படுகின்றது.
- இருப்பினும், இது ஒரு உண்மையான நதி வகை டால்பின் அல்ல. மேலும் இது கடற்கரைகளுக்கு அருகிலுள்ள நதி முகத்துவாரங்கள் மற்றும் உப்புநீரில் வாழ விரும்புகின்றது.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்புப் பட்டியலில் ஐராவதி டால்பின்கள் 'பாதிக்கப்படக்கூடிய இனங்கள்' என்ற நிலையின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் உள்ள ஒடிசா மாநிலத்தின் பூரி, குர்தா மற்றும் கஞ்சம் ஆகிய மாவட்டங்களில் பரவியிருக்கும் சிலிக்கா ஏரியானது இந்தியாவின் மிகப்பெரிய உப்பங்கழி அல்லது காயல் (உப்பு நீர் மற்றும் நன்னீர் கொண்ட கலவை) ஆகும்.
- இது வங்காள விரிகுடாவில் பாயும் தயா ஆற்றின் முகப்பில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய கடலோர உப்பங்கழி ஆகும்
- இது ராம்சார் மாநாட்டின் கீழ் 'சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக' அறிவிக்கப் பட்டுள்ளது.

## ஆய்வு தொடர்பான துளையிடும் உரிமம்

- சுற்றுச்சூழல் அனுமதி கோருவதில் இருந்து ஆய்வு துளையிடுதலை மேற்கொள்ள

விரும்பும் எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்களுக்கு சுற்றுச்சூழல் அமைச்சகம் விலக்கு அளித்துள்ளது.

- ❖ இதற்கான அனுமதி என்பது கரையோர மற்றும் கடற்பரப்பில் துளையிடுதல் ஆய்வுகளுக்கானது.
- ❖ இந்த செயல்முறையானது ஒரு சுற்றுச்சூழல் ரீதியிலான முக்கியத்துவம் வாய்ந்தது.
- ❖ இது கடலில் பல ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டி, நில அதிர்வு ஆய்வுகளை நடத்துகின்றது.
- ❖ இன்று வரையிலும், பிரிவு "A" வகையைச் சேர்ந்த ஆய்வுகள் மிக அதிக அளவிலான சுற்றுச்சூழல் ஆய்வுக்குத் தகுதியானவை என அழைக்கப் படுகின்றன.
- ❖ திட்ட ஆதரவாளர்கள் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த ஒரு மதிப்பீட்டுத் அறிக்கையைத் தயாரித்து, அவை மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ஒரு நிபுணர்களின் குழுவால் ஆராயப்பட அவ்வகை ஆய்வுகள் வேண்டுகின்றன.

## கரியமிலப் பொருட்கள் நீக்க இலக்குகள்

- ❖ 2008 ஆம் ஆண்டின் அளவை ஒப்பிடும்போது 2050 ஆம் ஆண்டில் கப்பல் துறையில் இருந்து வெளியேற்றப்படும் கரியமிலப் பொருட்களின் வெளியேற்றத்தை 50% ஆகக் குறைத்தல் என்னும் இலக்கை ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்திருந்தது.
- ❖ இந்த இலக்கை அடைய, உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்து 1 டிரில்லியன் அமெரிக்க டாலர்களைச் செலவிட வேண்டியுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, கப்பல் துறையிலிருந்து ஏற்படும் உமிழ்வானது உலக அளவில் ஏற்படும் கரியமில வாயு உமிழ்வில் 2.2% ஆகும்.
- ❖ கரியமிலப் பொருட்கள் நீக்க இலக்கானது சர்வதேசக் கடல்சார் அமைப்பால் தொடங்கப் பட்டது.
- ❖ சர்வதேசக் கடல்சார் அமைப்பானது சர்வதேசக் கப்பல் போக்குவரத்து மற்றும் அதன் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை ஒழுங்குபடுத்துகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★